அணையாத தீபமாய் அழியாத கோலமாய்
நிலையான திலீபனே நம் நினைவெல்லாம் உன் தியாகம்
நிலவிடுதே நெஞ்சங்கள் மெழுகாக உருகிடுதே 2

நீ வளர்த்த யாகம் சத்தியத்தின் யாகம்
நீவகுத்த பாதை நீதிதேவன் கீதை
உன்னால் இங்கு உருவானதே  ஓர் உன்னத வரலாறு
உள்ளம் எங்கும் கருவானது நம் உரிமைக்கு ஒரு கீறு
இனம் இங்கு ஒன்றாக இணையவைத்தாய்
இதையத்தில் புது வேகம் விழையவைத்தாய் 2

அணையாத தீபமாய் அழியாத கோலமாய்
நிலையான திலீபனே நம் நினைவெல்லாம் உன் தியாகம்
நிலவிடுதே நெஞ்சங்கள் மெழுகாக உருகிடுதே

நீ மறைந்த நாளை நினைவு கூறும் வேளை
வான் முயில்கள் சூளும்  வான் சிவந்தோடும்
சோலை குயில் உன் நாமத்தை சொல்லிப்பாடுதையா
சோகத்திலே தமிழீழமே சோர்ந்தே வாடுதையா
தனக்கென்று வாழாத தவ மணியே
தமிழுக்கு புகழ் தந்த குணநிதியே 2

அணையாத தீபமாய் அழியாத கோலமாய்
நிலையான திலீபனே நம் நினைவெல்லாம் உன் தியாகம்
நிலவிடுதே நெஞ்சங்கள் மெழுகாக உருகிடுதே

பன்னிரண்டு நாளாய் கதியிழந்து போனாய்
அன்னியரின் தேசம் அடைந்தது இங்கு மோசம் 2
காந்தி மகான் கண்ட வழி கடந்தே நின்றவனே
காலம் எல்லாம் உன்காவியம் படைத்தே சென்றவனே
அண்ணா உன் வரவெங்கும் நன வாகுமே
அழகான தமிழீழம் உருவாகுமே 2

அணையாத தீபமாய் அழியாத கோலமாய்